## சுவாமி விபுலானந்த அழகியற்கலைகள் கற்கைகள் நிறுவகம் - 2014

சுவாமி விபுலானந்த அழகியற்கலைகள் கற்கைகள் நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய வெளிப்படுத்தல் தகல்வல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது அவதானிப்புகளும் கருத்துரைகளும் இந்த அறிக்கையில் காட்டப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களைப் (ISSAI 1000 – 1810) பின்பற்றி இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சுவாமி விபுலானந்தா அழகியற்கலைகள் கற்கைகள நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனதுநிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்ட அல்லது நீக்கப்பட்ட 04 உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 573,338 கூட்டுத்தொகையான பதவியணியினர் கடன் மீதிகள் 03 ஆண்டுகளிற்கும் மேலாக நிலுவையாக காணப்பட்டன. இருப்பினும், அந்த நிலுவை மீதிகள் கணக்காய்வுத் திகதியான 2015 யூன் 30 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 04 உத்தியோகத்தர்களிற்குச் செலுத்தப்பட்ட ரூபா 14,393 தொகையான சம்பள முற்பணங்களை அந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 03 ஆண்டுகளிற்கும் மேலாக நிலுவையாகக் காணப்பட்டன.

(இ) ரூபா 1,652,862 தொகையினை தீர்ப்பதற்கு அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு அர்த்தமுள்ள நடவடிக்கை எடுக்கப்படாது இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு செலுத்த வேண்டியது என 10 ஆண்டுகளிற்கும் மேலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 109 ஆம் பிரிவின் பிரகாரம் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களும் அவற்றின் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளும் அரசாங்க வர்த்தமானியில் 2015 ஏப்ரல் 24 ஆந் திகதி வரை வெளியிடப் பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 371(2) இன் பிரகாரம், பதவியணியனருக்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் அவை வழங்கப்பட்ட நோக்கங்கள் முடிவுற்றவுடன் உடனடியாக தீர்க்கப்படுதல் வேண்டும். இருப்பினும், அறு சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த

ரூபா 383,420 கூட்டுத்தொகையான முற்பணங்கள் 04 முதல் 07 மாதங்கள் வரையான கால வீச்சிலமைந்த தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தன.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டினுள் நிறுவகத்தின் தொழிற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் நேரொத்த முன்னைய ஆண்டிற்குரிய மீண்டெழும் செலவினத்திற்கான ரூபா 68,364,000 அரசாங்க மானியத்தை கருத்திற்கொள்ள முன்னரான ரூபா 70,750,664 பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் மீண்டெழும் செலவினத்திற்கான ரூபா 74,000,000 அரசாங்க மானியத்தை கருத்திற்கொள்ள முன்னர் ரூபா 90,919,352 பற்றாக்குறையொன்றானமையால் நிதிவிளைவுகளில் ரூபா 20,168,688 தொகையான மேலுமொரு பின்னடைவை காண்பித்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஆளுக்குரிய வேதனாதிகள் ரூபா 13,256,976 இனால் அதிகரித்திருந்தமையே இந்த வீழ்ச்சிக்குப் பிரதானமாக பங்களித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டில் நிறுவகத்தின் கல்விச் செயலாற்றல் பின்வருமாறு காணப்பட்டது.

#### (அ) பரீட்சைகளின் பெறுபேறுகள்

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட இறுதிப் பரீட்சைகள் மற்றும் பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| விபரம் | இசை பீடம் | | நடன பீடம் | | நாடக மற்றும் திரைக்கூட பீடம் | | கட்புல மற்றும் தொழில்நுட்பக் கலைகள் பீடம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2014 | 2013 | 2014 | 2013 | 2014 | 2013 | 2014 | 2013 |
| மீளாய்வாண்டில் இறுதிப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | 38 | 26 | 29 | 25 | 39 | 50 | 46 | 43 |
| பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை | 23 | 19 | 27 | 22 | 38 | 46 | 32 | 33 |
| மீளாய்வாண்டில் இறுதிப் பரீட்சைக்கு தோற்றிய மொத்த மாணவர்களின் எண்ணிக்கையின் சதவீதமாக பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை | 61 | 73 | 93 | 88 | 97 | 92 | 70 | 77 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய இசை பீடத்தினதும் கட்புல மற்றும் தொழில்நுட்பக் கலைகள் பீடத்தினதும் முறையே 38 மற்றும் 46 மாணவர்களில் இறுதிப்பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் மொத்த எண்ணிக்கையில் 39 மற்றும்

30 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற முறையே 15 மற்றும் 14 மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைந்திருக்கவில்லை.

**4.2 முகாமைத்தவ வினைத்திறமையீனங்கள்**

இது தொடர்பில் பின்வரும் வினைத்திறமையீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிறுவகம் 2013 ஆம் ஆண்டில் ரூபா 2,119,360 மொத்தக் கிரயத்தில் 45 அடுக்குக் கட்டில்களை கொள்வனவு செய்திருந்தது. இருப்பினும், இக் கட்டில்கள் வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்த கட்டிடத்தில் 2015 யூலை 31 ஆந் திகதி வரை விளைவற்று வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) ரூபா 190,000 மொத்தக் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த இரண்டு கணனிகள் உரிய நோக்கங்களிற்காக பயன்படுத்தப்படாது, கொள்வனவு செய்யப்பட்ட திகதியான 2014 செப்தெம்பர் 18 ஆந் திகதியிலிருந்து களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டில் 7 சந்தர்ப்பங்களில் நிறுவகத்தின் 03 உத்தியோகத்தர்களிற்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 300,080 கூட்டுத்தொகையான முற்பணங்கள் குறித்த உத்தியோகத்தர்களினால் 2015 யூலை 31 ஆந் திகதி வரை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நடன பீடத்தின் களஞ்சியத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது ரூபா 920,621 பெறுமதியான 38 விடயங்களில் இருப்புக் குறைவுகள் வெளிப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், இந்த இருப்பு விடயங்களின் நட்டத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களிற்கு எதிராக பொருத்தமான நடவடிக்கையினை நிறுவகம் எடுத்திருக்கவில்லை.

**4.3 மனித வள முகாமைத்துவம்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் நிலைமை கீழே தரப்பட்டுள்ளது.

| பதவியணியினர் மட்டம் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| கல்விசார் | 38 | 36 | 02 | - |
| கல்வி உதவியாளர் | 07 | 01 | 06 | - |
| நிறைவேற்றுனர் | 05 | 03 | 02 | - |
| எழுதுவினைஞர் மற்றும் அதனுடன் இணைந்தவை | 16 | 10 | 06 | - |
| கனிஷ்ட மட்டம் | 07 | 27 | - | 20 |
| மொத்தம் | 73 | 77 | 16 | 20 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிரேஷ்ட உதவி நிதியாளர் மற்றும் களஞ்சியப் பொறுப்பாளர் பதவிகள் 2012 யூலை 02 ஆந் திகதி முதல் வெற்றிடமாக உள்ளன. அதேநேரம், மேற்படி பதவிகளுக்கு

பொருத்தமான உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்காது கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உத்தியோகத்தர்கள் பதிற்கடமை அடிப்படையில் மேற்படி பதவிகளில் செயலாற்றி வந்திருந்துடன் மீளாய்வாண்டில் ரூபா 101,719 தொகை பதிற்கடமை படியாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கனிஷ்ட ஊழியர்களிற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 07 ஆக காணப்பட்ட போதிலும், அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலதிகமாக 20 ஊழியர்களை நிறுவகம் ஆட்சேர்ப்புச் செய்திருந்தது. மேலும், இந்த மேலதிக பதவியணியினை நிரப்புவதற்காக தொடர்புடைய அதிகாரிகளிடமிருந்து தேவையான அங்கீகாரத்தினை நிறுவகம் பெற்றுக்கொண்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானம் மற்றும் செலவினங்களிற்கிடையில் 20 சதவீதம் முதல் 2,524 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஆ) கொள்வனவுகள்
(இ) முற்பணங்களை செலுத்துதல்